(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 382.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 ஓகத்து 06, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2642/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு பொருத்தமான பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூபா 2 இலட்சத்தை விஞ்சாத கடன்தொகையொன்றை சலுகை வட்டி அடிப்படையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்கடன்தொகை வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3272/12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் பஸ் எனும் எண்ணக்கரு நாட்டில் பொதுப் போக்குவரத்து முறைமைக்கு உதவியுள்ளதா என்பதையும்;

(ii) அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள தனியார் பஸ் இயக்குனர்களின் எண்ணிக்கையினை மாவட்ட அடிப்படையிலும்;

(iii) தற்போது இயங்குகின்ற தனியார் பஸ்களின் எண்ணிக்கையினையும்; மற்றும்

(iv) இந்த பஸ்கள் யாவும் அனுமதிப்பத்திரங்களுடனா இயங்குகின்றன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அரசாங்கத்திடமிருந்து தனியார் பஸ் இயக்குனர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளையும்;

(ii) நாடு தழுவிய ரீதியில் தனியார் பஸ் தொழிற்துறையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள மொத்த ஆசன வசதிகளையும்; மற்றும் ;

(iii) பஸ் ஒன்றினால் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் வருடமொன்றிற்கு ஈட்டப்படும் வருமானத்தையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3701/ '13

3\.

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்ற அரச மற்றும் தனியார் எரிபொருள் சந்தைப்படுத்தல் கம்பனிகள் யாவை;

(ii) கடந்த 10 வருட காலப் பகுதியினுள் மேற்படி ஒவ்வொரு கம்பனியும் வருடாந்தம் செலுத்திய வரியின் அளவுகள், ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வரி செலுத்துகையில் ஏதேனும் ஒரு கம்பனிக்கு ஏதேனும் வரி விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(v) இத்தகைய வரிச் சலுகையை வழங்குவதற்கான காரணங்கள் யாவை;

(vi) கடந்த பத்து வருட காலப் பகுதியினுள் மேற்படி வரி விடுவிப்பு வழங்கப்பட்டமையின் காரணமாக இலங்கை அரசாங்கம் இழந்துள்ள வரித் தொகை ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வருடாந்தம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3824/ '13

4\.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதார அமைச்சின் கீழுள்ள போதனா ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் பணியாற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளர்கள் சார்பில் துப்பரவேற்பாட்டு தொழிலாளர்கள் நிறைவேற்றுகின்ற கடமைப்பொறுப்பு யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர் களுக்காக கொடுப்பனவுகள் உட்பட சம்பளமாக வழங்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012ஆம் ஆண்டில், ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தனியார் துறைக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பணம் செலுத்தப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3919/ '13

5\.

கௌரவ புத்திக பதிரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மா, வாழை, பப்பாளி போன்ற பழங்களை நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்கும் விரைவாக பழுக்க வைப்பதற்குமாக சில வர்த்தகர்கள் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்களின் விஞ்ஞான, இரசாயன மற்றும் வர்த்தகப் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி இரசாயனப் பொருட்களில் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழங்களை பழுக்க வைப்பதற்காகவும் நீண்ட நாட்கள் வைத்திருப்பதற்காகவும் மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துகின்ற வர்த்தகர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கப்பட்ட அத்தகைய வர்த்தகர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களில் தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4506/ '13

6\.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக பத்து ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) கொள்வனவு செய்ய எதிர்பார்த்துள்ள மேற்படி ஆகாய விமானங்களுக்காக செலவிட உத்தேசித்துள்ள பணத் தொகை யாது;

(iii) மேற்படி ஆகாய விமானங்கள் எந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) விமானக் கம்பனி 2013 சனவரி முதல் இற்றைவரை அடைந்துள்ள நட்டம் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அதிகளவு நட்டத்துடன் பேணிவரப்படுகின்ற ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்காக புதிதாக ஆகாய விமானங்களைக் கொள்வனவு செய்ய நிதி ஏற்பாடுகள் பெறப்படுகின்ற விதம் யாது;

(iii) மேற்படி புதிய ஆகாய விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவதை அங்கீகரிக்கிறாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4522/ ' 13

7.

கௌரவ நலின் பண்டார ஜயமஹா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சக்தியூட்டும் பானமொன்றாக சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள "ரெட் புள்" எனும் பானத்தை உள்நாட்டு சந்தையில் விளம்பரப்படுத்துவதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இப்பானத்தை அருந்துவதன் மூலம் ஏற்படும் பக்கவிளைவுகளை கவனத்திற்கொண்டு, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை இதனைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கையில், மீண்டும் இப்பானத்தை இறக்குமதி செய்வதற்காக சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4737/ '14

8.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலொன்னாவ, பன்சல்ஹேன வீதி, இலக்கம் 9/1 இல் வதியும் திரு. ஏ.ஏ சாப்ஜு 38 ஸ்ரீ 6185 இலக்கமுடைய மஹேந்திரா ஜீப் வண்டியை அதன் ஆரம்ப உரிமையாளராகிய திருமதி. பீ. விஜேசூரியவிடமிருந்து கொள்வனவு செய்து, அந்த மோட்டார் வாகனத்தின் பதிவினை உத்தியோகபூர்வமாக இவரது பெயருக்கு மாற்றும் பொருட்டு 2007 ஆம் ஆண்டில் விண்ணப்பப்படிவமொன்றை (இலக்கம் TR 200760250) மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தியுள்ளார் என்பதையும்;

(ii) பலவருடங்கள் கடந்துள்ள போதிலும் மேற்படி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் இதுவரை மேற்படி வாகனத்தின் சட்டபூர்வமான ஒப்படைப்பு நடவடிக்கைகள் இடம்பெறவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வாகனத்தின் பதிவுரிமையை திரு. சாப்ஜுவின் பெயருக்கு ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4749/ ' 14

9.

கௌரவ அசோக் அபேசிங்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய அரசினால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(ii) மாகாண சபைகளால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) பிரதேச சபைகளால் பராமரிக்கப்படும் வீதிகளின் நீளம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மத்திய அரசினால் பராமரிக்கப்படும் தற்போது காபட் இடப்பட்டுள்ள வீதிகளின் நீளம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4845/ '14

10.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுரைச்சோலை அனல்மின் நிலையம் தரமற்ற மின்நிலையமென வலு, சக்தி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி மின்நிலையத்தின்,

(i) முதலாம் கட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை மற்றும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) தரம், உபகரணங்கள் மற்றும் செயற்பாட்டு நிலைமை சம்பந்தமாக ஏற்புடைய நிர்மாணிப்புக் கம்பனியுடன் உத்தரவாதக் காலப்பகுதியுடனான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததா;

(iii) தரமற்ற நிலைமை மற்றும் இடம்பெறுகின்ற செயலிழப்புக்கள் சம்பந்தமாக மின்நிலையத்தை நிர்மாணித்த கம்பனிக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

(iv) திருத்தவேலைகளுக்காகவும் அக்காலப்பகுதியில் இழந்த மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் செலவாகிய பெருந்தொகைப் பணத்தை அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பாரா;

(v) முதலாம் கட்டத்தை சரிவர நிர்மாணிக்காத கம்பனியே அதன் அடுத்த கட்டங்களையும் நிர்மாணிப்பதாயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் மின்சாரத்தை உற்பத்திசெய்ய திட்டமிடப்படுள்ளதா;

(ii) மின்சாரக் கட்டணப்பட்டியல் குறைவடைய ஏதுவாக அமையக்கூடிய அத்திட்டம் காலவரையறைகள் சகிதம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4852/ '14

11.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் சூதாட்ட அலுவல்களை நடத்துவதற்காக உண்ணாட்ரசிறைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பதிவுகளின் எண்ணிக்கையினையும்;

(ii) இப்பதிவுகள் வழங்கப்பட்ட நபர்களின் பெயர்களையும்;

(iii) மேற்கூறப்பட்ட பதிவுகள் வழங்கப்பட்ட சரியான திகதிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4865/ '14

12.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொடிகாமம், எரியான்பிட்டி மயானத்திற்கான நுழைவுப் பாதையானது பயணம் செய்வதற்குப் பொருத்தமற்ற நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) மழை காலங்களில் மேற்படி மயானத்திற்கு பிரவேசிக்க முடியாதவாறு வீதியிலுள்ள கிடங்குகளில் மழைநீர் நிரம்பிக் காணப்படுவதால் சடலங்களை எடுத்துச் செல்லும்போது மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கொடிகாமம், எரியான்பிட்டி மயானத்திற்கான நுழைவுப் பாதையை மறுசீரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4908/ '14

13.

கௌரவ ஆர். எம் ரஞ்சித் மத்துமபண்டார,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகல, எத்திமலேவெவ, வைத்தியசாலைக்கு எதிரில், இலக்கம் 127/1இல் வசிக்கும் திரு. டபிள்யு. எம். வீரசிங்ஹ நிலஅளவைத் திணைக்களத்தில் நிலஅளவைக் கள உதவியாளராக (டபிள்யுஈ/டபிள்யு/158) சேவையாற்றினாரென்பதையும்;

(ii) பொலநறுவை, புதிய நகரத்தில் நிலஅளவையாளர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் நிலஅளவையாளர் தலைமை அதிபதியின் சீஜீ/1/1/1/வீ/460 இலக்க 2004.08.20 திகதிய கடிதம் மூலமாக அவரது தொழில் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. வீரசிங்ஹவின் தொழில் இடைநிறுத்தத்திற்கு ஏதுவாக அமைந்த பதுளை மேல்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட 91/2003 ஆம் இலக்க வழக்கு சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் 2012.11.02 ஆந் திகதி இவர் குற்றமற்றவரென விடுதலை செய்யப்பட்டுள்ளமையால் தொழில் இடைநிறுத்தப்பட்ட நாளில் இருந்து இவருக்கு உரித்தான நிலுவைச் சம்பளத்தை வழங்குவதற்கும் இவருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4952/ '14

14.

கௌரவ நிரோஷன் பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் மஹவெவவில் இருந்து கட்டுநேரிய வரையான கடற் பிரதேசத்தில் கரையோரம் தீவிர கடலரிப்புக்குள்ளாகி வருகின்றமையை அறிவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேசத்தில் கடலரிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ii) அந்நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னரும்கூட கடலரிப்பினைத் தடுக்க இயலாமல் போயுள்ளதா;

(iii) ஆமெனில், ஏன்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற கடலரிப்பினால் அழிவடைந்துள்ள மற்றும் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு இலக்காகி உள்ள வீடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(ii) அழிவடைந்துள்ள வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு நட்டஈடு செலுத்தும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா;

(iii) அந்நட்டஈட்டுத் தொகையை மதிப்பிடுகின்ற முறையியல் யாது;

(iv) கடலரிப்பு காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் பொது வாழ்க்கையைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4962/ '14

15.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஆண்டு உர மானியம் வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பயிர் வகைகளுக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு?

(ஆ) (i) உர மானியத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் தொடக்கம் வழங்கப்பட்ட ரூபா 350/- உரப் பொதியொன்றுக்கு ரூபா 150/- காப்புறுதித் தொகையாக மேலதிகமாக அறவிடப்பட்டதென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மானியத்தின் கீழ் வழங்கப்படும் ஓர் உரப்பொதிக்காக ரூபா 150/- மேலதிகமாக அறவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதியின் அடிப்படை யாது;

(iii) மேற்படி காப்புறுதி ஆரம்பிக்கப்பட்ட திகதி தொடக்கம் இதுவரை விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி காப்புறுதியின் கீழ் உரிமைக் கோரல்களுக்காக நிறைவு செய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகம்,— இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகத்தைத் தாபிப்பதற்கும், பேணுவதற்கும், நிருவகிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; இலங்கைச் சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்விக்கு இட்டுச் செல்கின்ற நெறிகளை வசதிப்படுத்துவதில் அவசியமான சட்ட உள்ளகக் கட்டமைப்பை ஏற்பாடுசெய்வதற்கும்; 1999 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவனச் சட்டத்தை நீக்கஞ்செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1999 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் 2013.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான விஜயகுமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2013.09.13 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2011,— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின், 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2011.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப் பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை 2011,— 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழிற்துறைக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமைய, 2013.10.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதான, 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 திசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தொழிநுட்பவியல், ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2014.02.21 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

பியசேன கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

வசந்த சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.